# கமு/கமு/இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்
## மூன்றாம் தவணைப்பரீட்சை – 2022 (2021)

தரம் : 6 | பாடம் : விஞ்ஞானம்

பெயர் : ................................ | நேரம்: 2 மணித்தியாலம்

**<u>சரியான விடையின் கீழ் கோடிடுக.</u>**

1. வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டு வாயுவை குறைக்கும் செயற்பாடக அமைவது.

i) வாகன போக்குவரத்து ii) ஒளித்தொகுப்பு

iii) மரங்களை வெட்டுதல் iv) குப்பை எரித்தல்

2. சுண்ணாம்பு நீரை பால் நிறமாக மாற்றும் வாயு எது?

i) ஒட்சிசன் ii) ஐதரசன் iii) காபனீரொட்சைட்டு iv) நைதரசன்

3. தனிக்கல அங்கி அல்லாதது எது?

i) ஐதரா ii) புரமேசியம் iii) கிளமிட்மோனசு iv) யூக்கிளினா

4. ஆயட்காலம் முழுவதும் வளர்ச்சி அடையும் அங்கி எது?

i) பனை ii) முயல் iii) மனிதன் iv) புறா

5. பின்வருவனவற்றுள் நிலக்கீழ் நீர் எது?

i) ஆற்றுநீர் ii) மழைநீர் iii) சமுத்திரநீர் iv) கிணற்றுநீர்

6. உவர்திறன் கூடுதலாக காணப்படும் நீர் எது?

i) நன்னீர் ii) சவர்நீர் iii) உவர்நீர் iv) கலங்கியநீர்

7. திட்டமான வடிவத்தையும் திட்டமான கணவளவையும் கொண்டிருக்காத சடப்பொருள் எது?

i) வளி ii) கல் iii) நீர் iv) பால்

8. கறியுப்பின் இரசாயண பெயர் எது?

i) சோடியம் குளோரைட்டு ii) கல்சியம் குளோரைட்டு

iii) சோடியம் சல்பேற்று iv) சோடியம் காபனேற்று

9. உலர் மின்கலத்தின் மின் அழுத்த வேறுபாடு எது?

i) 3V ii) 2V iii) 1.5V iv) 2.5V

10. பூக்களை சுவாச அங்கமாக கொண்டிருக்காத அங்கி எது?

i) மீன் ii) திமிங்கிலம் ii) நண்டு iv) இறால்

11. பின்வருவனவற்றுள் உயிர்த்திணிவு எது?





i) நிலக்கரி ii) L.P வாயு iii) மரத்தூள் iv) பெற்றோலிய எண்ணெய்

12. மின்சக்தியை இயக்க சக்தியாக மாற்றும் உபகரணம் எது?

kalvi.lk

i) மின்விசிறி ii) மின்குமிழ் iii) மின்அழுத்தி iv) வானோலி

13. கல்வனோமானியின் குறியீட்டை தருவது எது?

i)  ii)  iii)  iv) 

14. படத்தில் உள்ள காந்தவகை எது?



i) U வடிவ காந்தம் ii) பரிலாடக்காந்தம்

iii) வளையக்காந்தம் iv) வட்டக்காந்தம்

15. பின்வருவனவற்றுள் தோல்க்கருவியை கொண்ட கூட்டம்?

i) மேளம், கிற்றார், வீணை ii) உடுக்கை, மேளம், றபான்

iii) வீணை, வயலின், தவில் iv) தவில், மேளம், வயலின்

16. ஊசிக்காந்தம் பயன்படும் உபகரணம் எது?

i) டைனமோ ii) ஒலிபெருக்கி iii) திசைகாட்டி iv) வானொலி

17. அதிக வன்மையுடைய சடப்பொருள் எது?

i) களி ii) வைரம் iii) காரியம் iv) கருங்கல்

18. காற்றலை மூலம் மின் உற்பத்தி செய்யப்படும் இடம்

i) திருகோணமலை ii) புத்தளம் iii) அம்பாறை iv) கொழும்பு

19. கொரோனா நோய்க்குரிய நுண்ணங்கி வகை எது?

i) பற்றீரியா ii) வைரசு iii) பங்கசு iv) புரட்டசோவா

20. உலர்ந்த கோபால்ற்று குளோரைட்டு கடதாசியின் நிறம் எது?

i) இளம்சிவப்பு ii) நீலநிறம் iii) மஞ்சள் iv) வெள்ளை

kalvi.lk

## பகுதி II

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்க.**

**i) தொடர்பு படுத்துக**

| | |
|---|---|
| 1. இயற்கை ஒலி | நிலைமாற்றம் |
| 2. நீர் மின் உற்பத்தி | உலர்கலம் |
| 3. மேற்பரப்பு நீர் | நீர்வீழ்ச்சி |
| 4. முதன்மைக்கலம் | டைனமோ |
| 5. மெழுகு உருகுதல் | சமுத்திரம் |

(5 x 2 = 10)

**ii) சரியாயின் சரி ( √ ) எனவும் பிழையாயின் பிழை ( X ) எனவும் அடையாளம் இடுக.**

1. மீண்டும் மீண்டும் மின்னேற்றி உபயோகப்படுத்துவது துணைக்கலம் ஆகும் ( )
2. திண்மவிரிவு பயன்படும் சந்தர்ப்பம் வெப்பமானிகளில் இரசம் பயன்படுவது ஆகும் ( )
3. புவியின் வெப்பநிலை உயர்வுக்கு காரணமாக அமைவது மனித நடவடிக்கைகள் ஆகும் ( )
4. உணவு வலையில் இருந்து ஒன்றுக்கு மேற்பட்ட உணவுச்சங்கிலியைப் பெறலாம் ( )
5. பச்சைத்தாவரங்கள் உணவு உற்பத்தி செய்யும் செயன்முறை ஒளித்தொகுப்பு ஆகும் ( )

Educations கல்வி අධ්‍යාපන

(5 x 2 = 10)


**iii) தரப்பட்ட சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக**

(தாவரம், ஒளிச்சக்தி, ஈரமானி, சூறாவளி, காற்று)

1. வேகமாக அசையும் வளி ……………………………………. எனப்படும்.
2. சூரியக்கலத்தில் …………………………… பயன்படுகின்றது.
3. வளிமண்டல ஈரப்பதனை அறிய …………………………… பயன்படுகிறது.
4. உணவுத்தொடர்புகளில் உற்பத்தியாக்கியாக ……………………………. பயன்படுகிறது.
5. தாழமுக்கம் காரணமாக உருவாகும் அனர்த்தம் ………………………… ஆகும்

(5 x 2 = 10)

**iv) பின்வரும் உணவுத்தொடர்புகளை பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**



1. மேலே காட்டப்பட்டுள்ள உணவுத்தொடர்பு எவ்வாறு அழைக்கப்படும்.

2. இங்குள்ள உற்பத்தியாக்கி எது?

3. இத்தொடர்பில் காணப்படும் 4 இனைப்புகளைக்கொண்ட உணவுச்சங்கிலிகள் 2 தருக?

i)

ii)

4. இதில் காணப்படும் 1ம் படி நுகரிகள் 2 தருக?

i)………………………………………………. ii)………………………………………

5. இதிலுள்ள ஊனுண்ணி ஒன்று தருக?

6. பச்சைதாவரங்கள் ஒளித்தொகுப்பிற்கு தேவையான சக்தியை எங்கிருந்து பெற்றுக்கொள்கின்றன?

(6 x 2 = 12)

**iv) அடைப்புக்குறிக்குள் இருக்கும் சொற்களில் சரியான சொல்லை தெரிவுசெய்து கோடிடுக.**

1. பொருளொன்றில் உள்ள சூட்டின் அளவு (வெப்பம், வெப்பநிலை) என அழைக்கப்படும்.

2. இரும்பை நன்கு சூடாக்கும் போது அதன் நிறம் (சிவப்பு, நீலம்) ஆகும்.

3. நீண்டகாலத்திகுறிய இயற்கை அனர்த்தமாக அமைவது (சூறாவளி, வறட்சி).

4. குறுகிய காலத்தில் குறித்த இடத்தில் நிலவும் வளிமண்டல நிலைமை (வானிலை, காலநிலை) எனப்படும்.

5. காற்றுத்திசைகாட்டியின் அம்புக்குறி கிழக்கு நோக்கி இருப்பின் காற்று (கிழக்கு, மேற்கு) நோக்கி வீசுகின்றது.

6. மின்அழுத்தியின் வெப்பநிலையை கட்டுப்படுத்தும் பகுதியாக அமைவது (ஈருலோகசட்டம், மின்வடம்).

7. ஒளிபடும் அளவுக்கு ஏற்ப தடைப்பெறுமானத்தை காட்டும் தடையியின் வகை (மாறும்தடையி, ஒளியுணர்தடயி)

8. சிறிய மின்னோட்டத்தை அளக்கவும் மின்னோட்டத்தின் திசையை அறியவும் பயன்படும் மின்உபகரனம் (அம்பியர்மானி, கல்வனோமானி)

9. காந்தத்தை சுற்றி காந்தவிசை தொழிற்படும் பிரதேசம் (காந்தமுனை, காந்தபுலம்)

(9 x 2 = 18)




Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457